சார்பு நீதிமன்றம், பெருந்துறை, ஈரோடு மாவட்டம்

முன்னிலை : திரு.பா.சரவணன், பி.எஸ்.சி.,பி.எல்.,
சார்பு நீதிபதி, பெருந்துறை.

| | |
|---|---|
| OS.No | - 108/16 |
| வா.சா.1 – | பழனிச்சாமி |
| நாள் - | 11-02-2019 |

1969 ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

தாவா சொத்தின் தென்புறப் பகுதி எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் பொதுக்குடும்ப சொத்து என்றால் சரியல்ல. ஏகத்துக்கும் பொதுவாக உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் ஏகத்துக்கும் பொதுவாக இல்லை என்றால் சரியல்ல. எனக்கு விற்றவர்களுக்கும் எந்த பாகப்பிரிவினையும் இல்லை என்றால் அது பற்றி தெரியாது. நான் பத்திரப்படி தான் அனுபவிக்கிறேன். மொத்த சொத்திற்கும் தென்புறமாக உள்ள எங்களுக்கும் எல்லா பிரதிவாதிகளுக்கும் உரிமையுள்ளது. 9 ஏக்கர் 23 செண்ட் நிலத்திற்கு மேல்புறம் தடம் உள்ளது. மேற்படி தடத்திற்கு கிழபுறம் பாறைகள் உள்ளது என்றால் சிறு சிறு பாறைகள் உள்ளது. 6 ம் பிரதிவாதி பத்திரப்படியும் பட்டமாபடியும் அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எல்லோரும் பொதுவில் தான் அனுபவிக்கிறோம். சொத்துக்கு வடபுறம் போர்வெல் உள்ளது. எல்லோருக்கும் பொதுவாக உள்ளது. அந்த போர்வெல்லுக்கு மின்சார இணைப்பு உள்ளது. கிணற்று லைனிலிருந்து வருகிறது. எனது வழக்கில் கிணறு மற்றும் போர்வெல்லை வழக்குச் சொத்தாக காட்டவில்லை. இந்த சொத்துக்கள் அனைத்தும் ஏற்கனவே பாகப்பிரிவினை ஆகிவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட பட்டாவில் விஸ்தீரணம் குறைவாக காட்டப்பட்டுள்ளதால் பொய்யாக பாகப்பிரிவினை நடக்கவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. கிணறு மற்றும்

போர்வெல்லுக்கான மின் இணைப்பு எண். தெரியாது. இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Uploaded by

SS